Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 9/300 of 1953.

# இந்து சாதனம்

ஸ்தாபிதம் (1889 ஆவணி 28.) ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-எ௨] யாழ்ப்பாணம்:- சார்வரிஸூ கார்த்திகைமீ களஉ வெள்ளிக்கிழமை (2 December 1960) [இல-௪௫]

அரசியல் அலை

# எடுப்பதிலும் கொடுப்பதிலும் எத்தனையோ விதம்

## தாமாக முன் சென்று தயவாய் எடுங்கள் என்றவர்கள் ஒருசாரார்

## அரசாங்க ஆணைக்கு அமைந்து ஆமாச் சொல்லுகின்றவர் இன்னொருசாரார்

**எடுக்கும் பணியும் கொடுக்கும் தொண்டும் ஒன்றுக்கொன்று உடப்பாடாக இருந்த காட்சி சென்ற சில நாட்களாகப் பாடசாலைகள் அரசாங்கத்திடம் ஒப்புவிக்கப் பட்ட வைபவ விபரங்களி லிருந்து காணப்பட்டது.**

வெள்ளிக் கிண்ணத்தில் வைத்துப் பள்ளிக்கூடத்திறப்பை முகாமைக்காரர் வித்தியாதிகாரிக்கு வழங்க அன்னார் அதைத் தலைமை ஆசிரியருக்கு ஒப்புவிக்கச் சின்னஞ் சிறு விழாக்களும் நடைபெற்றன.

மார்கழி 1க்கு முன் சேர்ந்த பள்ளிக்கூடங்கள் என்ற ஒரு விதம். அதற்குப் பின் சட்டத்தின் அதிகாரத்தினல் தாமாகவே அரசாங்க மயமாக மாறினவை இன்னொரு விதம். கஞ்சிக்குட் கண்ட பயறு போலத் தனித்தியங்கக் கடைசி நாழிகையில் முடிவு செய்தவை வேறொருவிதம். இவைகளின் வேறுபாடு என்ன என்பதைப்பற்றி எவருஞ் சொல்ல முடியாமல்இருக்கின்றது. மார்கழி 1-க்கு முன் அரசாங்கப் பள்ளிக்கூடங்கள் ஆயினவற்றுக்கும் அதற்குப்பின் இயல்பாக அம்மயம் ஆனவைக்கும் வித்தியாசம் ஏதும் உளதா? என்ற கேள்வியைப் பலர் கேட்கின்றார்கள்; ஒருவரும் மறுமொழி பகர்வாரில்லை.

தை மாதம் பள்ளிக்கூடங்கள் புது முறையிலே தொடங்கும்பொழுது அவற்றுக்கு வேண்டிய உபகரணங்கள் அதாவது தினவரவுப் பதிவு இடாப்பு வெண்கட்டி, மை முதலியவற்றை அரசாங்கம் கொடுக்குமா அல்லது முன்போலத் தலைமை ஆசிரியர்கள் பள்ளிக்கூட நிதியிலிருந்து பெறுவார்களா, அதற்கு நிதியுண்டா? இந்த விதமான கேள்விகளும் எழுகின்றன.

பள்ளிக்கூடங்களிற் பிள்ளைகள் சேரும்விதம் என்ன, எந்தப் பள்ளிக்கூடத்திற் சேரலாம். எதிற் சேரமுடியாது என்பதும் விளக்கப்பட வேண்டிய விபரங்களுட் சில.

---

### தனித்தியங்கும் பாடசாலைகள்

—:—

ஐம்பத்துமூன்று சைவ கிறிஸ்தவ முஸ்லிம் பாடசாலைகள் தனித்தியங்க முடிவு செய்துள்ளன. விபரம் பின்வருமவாறு:-

கத்தோலிக்க பாடசாலைகள் **42**, பிற கிறிஸ்தவ பாடசாலைகள் **6**, சைவப்பாடசாலைகள் **4**, முஸ்லிம் பாடசாலை *1*.

ஆனந்த நாலந்தக்கல்லூரிகள் தனித்தியங்குமெனப் பௌத்த பிரமஞான சபையின் நிருவாக சபையார் தீமத்னித்தபோதும் அத்தீர்மானம் சட்டவரம்புக்குட்படவில்லை என்பதனுல் நிராகரிக்கப்படலாயிற்று.

---

### முஸ்லிம் பாடசாலைகளில் சிங்களம் போதனமொழி

---

சிங்களம் போதனமொழியாயுள்ள இலைகளை முஸ்லிம் பாடசாலைகளில் உண்டாக்கும் திட்டமொன்று கல்விப் பகுதியால் அமைக்கப்படுகின்றதென அறியவருகின்றது.

---

### நற் சிந்தனை

வாச மலரடி பேச இனியது
ஆசை விடுவிடு ஆரு மிணையிலர்
ஈச னிணையடி ஏத்து மடியவர்
நாச மடைகிலர் நாடு திடமுடன்

(சிவ தொண்டன்)

---

### சைவ மங்கையர் கழகமும் தனித்தியங்க முடிவு

செயற்கரியது செய்தேயாகவேண்டுமென்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தனித்தியங்க முடிவு செய்துள்ளது. வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியும் அப்படியே தீர்மானித்தது; சைவ மக்களுக்குச் சோதனை காலமாய் வந்த இத்தருணத்தில் கொழும்பு சைவ மங்கையர் கழகமும் மாத்தளை பாக்கிய வித்தியாசாலையும் அவ்வாறே தனித்தியங்குவதெனத் தீர்மானித்துள்ளன. நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியும் இவற்றின் வரிசையில் அமைந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

---

# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி தனித்தியங்கும்

## இவைக்கல்லூரிகள்பற்றிப் பெற்றோர் கருத்தறிய முடிவு

**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி தனித்தியங்குமென்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முகாமைக்காரர் சபையார் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளனர்.**

இணைந்த கல்லூரிகளில் சம்பளம் பெறுவதுபற்றிப் பெற்றோரின் கருத்தை வித்தியாதிகாரி வாக்கெடுப்போன்று நடத்தி அறியவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சென்ற சில நாட்களாக மாணவர்களிடம் சம்பளம் பெறுமலும், அரசாங்க உதவி பெறுமலும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியை நடத்தும் ஒழுங்கு செய்தற்கு நிதி உதவி தேடி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பழைய மாணவர் பலர் பெரும் முயற்சி செய்தனர். சைவப் பெருமக்களின் ஆதரவு பெருமளவுக்கு வருவதாயிற்று.

நியாயவாதி திரு. சி. நாகலிங்கம், திரு. த. செல்லப்பாபிள்ளை, திரு. சி. த. மு பசுபதிச்செட்டியார் முதலிய பல சைவப் பெருமக்களால் 1890-ம் ஆண்டில் இக்கல்லூரி அமைக்கப்பெற்றது. இந்துக் கல்லூரிகளுக்குள் முதன்மைவாய்ந்த இது வளர்பிறைச் சந்திரன்போல்அன்று தொடக்கம் வளர்ந்துவந்துள்ளது. இக்கல்லூரியின் பழைய மாணவர், என்றும் குன்றாத ஆதரவை இடையறாது ஈந்து வந்துள்ளனர்.

இந்துக் கல்லூரியினதும் இணைந்த கல்லூரிகளினதும் அதிபர் திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை இப்பொழுது இங்கிலாந்திலுள்ளார். திரு. அ. அருளம்பலம், ஜே. பீ. இப்பொழுது அதிபராய்க் கடமையாற்றுகின்றார். வழக்கறிஞர் திரு. சி. அருளம்பலம் காரியதரிசியாய்க் கடமையாற்றுகிறார்.

பின்வரும் கல்லூரிகள் பற்றிப் பெற்றோரின் கருத்தை அறியுமாறு கேட்கப்பட்டுள்ளது:—

1. கொக்குவில் இந்துக்கல்லூரி
2. உரும்பிராய் ,,
3. சாவகச்சேரி ,,
4. காரைநகர் ,,
5. வட்டுக்கோட்டை ,,
6. யாழ். இந்துமகளிர்கல்லூரி.

---

## ஆசிரியர்களை அடிமைகளாக்கும் சதித்திட்டம்

### அகில இலங்கை ஆசிரிய சம்மேளனம் ஆற்ற வேண்டிய பணி

சென்ற காலத்தில் ஒரு பாடசாலையில் அல்லது குரு இல்லத்தில் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர் அல்லது குரு, அரசாங்க கௌரவத்துக்குரியவராய் இருந்து வந்தார். மக்களும் அவர்களை நன்கு மதித்து வந்தனர். அவர்களின் உரிமைகளின் மீது கட்டுப்பாடுகள் அரசாங்கத்தினலோ, மக்களாலோ வைக்கப்படவில்லை. அவ்வாசிரியர்களும் தாம் படித்த அல்லது பெற்ற அறிவுக்

மு. ஜெயரத்தினம்,
நவாலி

கேற்ப, பிறருக்கு இம்சை விளைவிக்காது கௌரவமாக நடந்து வந்தனர்: ஆனல் அந்நியர் ஆட்சி நம் நாட்டில் தலைகாட்டியதும், ஆசிரியர்கள் சம்பளத்துக்காக (பணத்துக்காக) பாடசாலைகளில் அமர்த்தப்பட்டனர். அந்நியருக்கு அடிமைப்பட்டு வேலை செய்ய நேர்ந்தபொழுதிலும், உதவி பெறும் பாடசாலைகளில் கடமையாற்றிவந்த ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை இருந்தது. அவ்வாசிரியர்கள் தத்தம் கிராமத்துச் சீர்திருத்த முற்போக்குப் பணிகளில் ஈடுபட்டு அவ்வக் கிராம மக்களின் ஆதரவைப் பெற்று வந்தனர்; வருகின்றனர்.

இன்றைய சட்டத்தின்படி அரசாங்க உத்தியோகஸ்தர் அரசியலில் தம் வாக்குரிமையைப் பிரயோகிப்பதை விட வேறெந்த வழியிலும் அரசியலிற் பங்குபெற முடியாது. இச்சட்டத்துள் அடங்காதோரைக் கட்டுப்படுத்த அரசாங்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

சார்வரிஸூ கார்த்திகைமீ கஎ உ வெள்ளிக்கிழமை


## இராமநாதன் இந்துப்பல்கலைக் கழகம்

இன்னல் பலவற்றுள் இடர்ப்பட்டுவரும் ஈழத்துத் தமிழகத்துக்கு இடையில் ஒரு ஆறுதலும் இறைவன் இன்னருளால் எழுந்திருக்கின்றது. எத்தனையோ ஆண்டுகளுக்குமுன் இராமநாத வள்ளல் இயற்றிய மாசுமறுவற்ற தேசத்தொண்டின் பயனே இப்பொழுது அன்னாரின் பொன்னுமத்தைப் பேணும் வகையிலும் இந்நாட்டு மக்களின் சைவச் சால்பை உரிய முறையிலே கல்வித் துறையிற் பாதுகாக்கும் நெறியிலும் பல்கலைக் கழகம் ஒன்று தோன்றுவது இது நிறுவப்பெறுவதற்கு ஆட்சியாளர்கள் ஒழுங்குகள் செய்ய உடம்பாடாய் விட்டனர் என்ற செய்தி உண்மையில் உள்ளத்தேற்றத்தை உதவுகின்றது.

புத்த பண்பாட்டுக்கெனப் பல்கலைக் கழகங்கள் இரண்டு நிறுவப் பெற்றபொழுதே வேறு சமயச்சால்புகளுக்கும் இத்தகைய கழகங்கள் அத்தியாவசியம் என்ற அடிப்படைக்கொள்கை அங்கீகாரமானதென்ற வகையில் சைவர்களுக்குப் பல்கலைக் கழகம் அமைத்தல் இயல்பான ஒழுங்கேயாகும். இது இவ்வாறாக இந்த நன்னோக்கத்தைக் கண்டிருக்கும் சிலர் நீதிக்கும் நியாயத்துக்கும் ஒவ்வாத பொருத்தமற்ற கருத்துக்களை எடுத்துக்கூறுவதைப் பார்க்கும்பொழுது, மனம் வருந்துகின்றது. 'அறன் ஆக்கம் வேண்டாதான் என்பன பிறனுக்கம் பேணாது அழுக்கறுப்பான் என்ற பான்மையில் நாட்டின் நலங்கருதி அமைக்கப் பெறுவனவற்றை நோக்குதல் மரபாகாது.

இதற்கிடையில் இன்னொருசாரார் இந்துப் பல்கலைக்கழகமும் தமிழ்ப் பல்கலைக்கழகமும் இரண்டு இந்நாட்டிற்குவேண்டியதில்லை, தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றே போதும் என்று கூறி இராமநாதன் பல்கலைக்கழகம் அமைக்கப் பெறுவதைப்பற்றி விபரீத எண்ணங் கொள்கின்றனர்.

தமிழகத்துக்கு இவ்விரு பல்கலைக் கழகங்களும் வேண்டும் என்பதுதான் அறிஞர்களின் கருத்து. இராமநாத வள்ளலின் நன்முயற்சி பயன்பெறுவதைத் தமிழகம் வரவேற்கின்றது.

இராமநாதவள்ளல் இலங்கைத் தலைமை தாங்கிய பெரியார். அரசியலில் மட்டும் ஈடுபட்டு அவ்வளவில் அமைந்தவர் அல்லர். மொழிக்கும் மதத்துக்கும் மனிதப் பண்பாட்டுக்கும் உழைத்து உலகப் புகழ்படைத்தவர். தனக்கென வாழாப் பிறர்க்குரிய பெரியாராகிப் பரோபகார அருங்கொடைகள் ஈந்தவர். பல கோடி பொன் விரயஞ் செய்து சிவாலயங்கள், கல்விக் கழகங்கள், மடாலயங்கள் அமைத்தவர். தலைவன் என்ற நிலைமைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து வந்தவர். இத்தகைய உத்தமத் தலைவர் எடுத்த முயற்சி இனிது நிறைவேறியதைத் தமிழகம் நன்றியுடன் பாராட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குயிலே
# தமிழ் காக்கக் கூவாய்

பண்டிதர் சோ இளமுருகனார்
( தமிழ்விரிவுரையாளர் மகளிர்கல்லூரி உடுவில், சுன்னாகம் )

### எல்லாளனைக் கூவுக என்றது

இந்துப் புணரி திரைக்கையா
லெற்றும் முத்தச் சுடர்மணிக
ளெடுத்துக் காந்தள் விரல்சேப்ப
வின்பக் குதலைக் கிளிமொழியார்
பந்து புனைந்து விளையாடும்
பாங்கார் நெய்தல் பயிலிலங்கைப்
பழைமைப் பதியு மரசாண்டு
பாரோர்க் கமுதக் கலைதந்த
சந்தத் தமிழ்த்தாய் வாழ்தற்குத்
தகுதி யிலையோ விங்கென்று
தனயர் நெஞ்சந் தாழ்வுற்றுத்
தழலிற் புகுந்த மெழுகொத்தார்
அந்தோ வாய்மை யெல்லாளா!
அரசே யெந்தங் குலமுதலே!
அவளைக் காக்க வருகவென
அன்பிற் கூவாய் பூங்குயிலே! (1

### மூவேந்தரைக் கூவுக என்றது

நஞ்சைப் பருகி யமுதளித்த
நம்பன் நயக்குந் தமிழ்த்தாய்க்கு
நலமார் செம்பொன் முடிகவிழ்த்து
நளிநீ ருலகிற் புகழ்பரப்பிச்
செஞ்சொற் சங்கப் பலகைமிசைச்
செவ்வே யிருத்தி யரசளித்த
சேரா! சோழா! பாண்டியனே!
சிறுமைச் செய்தி கேட்டீரோ
மஞ்சு தவழ மயிலாடும்
மதனச் சோலை யிலங்கையிலே
மன்னும் பண்டைத் தமிழ்க்குடிக்கு
வாயே யிழக்க வைத்தாராற்
றஞ்ச மவர்க்குத் தமிழேகாண்
தமிழை யன்றி யுயிர்காணர்
தாயே யனையீர் வருகவெனச்
சாலக் கூவாய் பூங்குயிலே! (2)

### அகத்தியனாரைக் கூவுக என்றது

இந்த வுலக மொழியெல்லா
மியற்கை போசை தீர்ந்தனவா
யிணங்கா வொலியா லியன்றனகாண்;
இருப்ப சிலவே பலவிறந்த;
மூந்தும் பழைமைக் கெல்லையதாய்
மூவாச் சாவாப் புதுமையதாய்
முட்டா வியற்கை யோசையதாய்
முயற்சி சிறிதி னொலிப்பதுவாய்ச்
சிந்தைக் கினித்துச் செவிக்கினித்துச்
செப்பும் நாவுக் கமுதளித்துத்
தெய்வம் மணக்குந் தமிழன்னை
இலங்கைத் தீவிற் சிதையாமே
விந்த மடக்கிப் பொதியிருந்து
விரும்பி வளர்த்த தமிழ்முனிவா!
விதியோ காக்க வருகவென
விதந்து கூவாய் பூங்குயிலே! (3

### கலைஞரைக் கூவுக என்றது

பண்ணா ரிரகு வமிசமெனும்
பனுவல் தந்த கேசரியே!
பாட லளித்துப் பொற்றேங்காய்ப்
பரிசில் கொண்ட பாவலனே!!
தண்ணார் தமிழை வளர்த்தகலைத்
தாமோ தரனே சிவசம்புத்
தகைசால் புலவா!! மாணிமுத்துத்
தம்பிப் பெயர்கொள் பேரறிஞா!
எண்ணு மெழுத்துந் துறைமுடித்தே
இயலும் மரபும் பேணியிசை
என்ற குமார சாமியெனு
மின்பத் தமிழ்செய் பாவலனே!!
கண்ணின் மணியைப் போணீவிர்
கருத்திற் கொண்ட தமிழ்த்தாயின்
கவலை போக்க வருகவெனக்
கனிந்து கூவாய் பூங்குயிலே! (4

சிவமயம்

## ஆறுமுகநாவலர் குருபூசை

நாள்: சார்வரிஸூ கார்த்திகைமீ உசஉ (9-12-60) வெள்ளிக்கிழமை

இடம்: யாழ்ப்பாணம் வைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்.

நிகழ்ச்சிகள் :

மு. ப. 9—பி. ப 1.
சிவபூஜாமண்டபத்தில் சிவபூசை, மண்டபத்தில் கடவுள் வழிபாடு, தமிழ்மறையோதல், நாவலர் சரித்திரம் படித்தல் மாகேசுர பூசை.

**விரிவுரைக்கூட்டம்**

தலைவர். முதலியார் C. முத்துத்தம்பி அவர்கள்

இரவு 6½—7. தமிழ்மறையோதல்
திரு R. துரைசுவாமி அவர்கள்

„ 7—9 தலைவர் முன்னுரை

**நாவலரின் தவப்பெருமை**
பண்டிதர், வித்துவான், திரு. இ. திருநாவுக்கரசு அவர்கள்

**"நாவலரும் சைவமும்"**
திரு. வே. சோமசுந்தரம் அவர்கள்.

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

சைவ பரிபாலன சபை,
யாழ்ப்பாணம், 2-12-60,

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,

### நாவலரைக் கூவுக என்றது

வேற்றுச் சமய விருண்மண்டி
மேலாஞ் சைவங் குன்றியநாள்
வேத மெழுந்த வாய்விண்டே
மெய்ம்மை நிறுத்தி நின்றதெனப்
போற்று மறிவுக் கதிரொளியாற்
போகாப் புன்மை போக்கியருட்
போது மலர்த்தித் தெய்வமணம்
புறத்து மகத்துங் கமழ்வித்தே
ஆற்று தலந்த தமிழன்னைக்
கருமை யுரைநூற் கலன்பூட்டி
அரசு கட்டின் மிசைவைத்த
ஆறு முகநா வலரையா!
தேற்றங் காணு திலங்கையிலே
தேம்பு மன்னுள் திறத்திரங்கிச்
செல்வா! காக்க வருகவெனச்
செவ்வே கூவாய் பூங்குயிலே! (5)

### தங்கப்புலவனைக் கூவுக என்றது

கன்னித் தமிழே கண்கண்ட
கல்வித் தெய்வ மெங்குலத்தார்
கருத்தி லூறித் தழைக்கின்றாள்
கலைமா நிதியந் தருகின்றாள்
அன்னை யப்ப னருந்துணைவர்
அனைத்து மாகிப் புறந்தருவாள்
அவளைப் பேசா நாளெல்லாம்
அவமே கழிந்த நாளென்று
மன்னு மமுதம் புறங்காண
மதுரப் புணரி கடைந்துசுவை
வற்றா தூறும் பாவமுதம்
வழங்கி வளர்த்த கற்பகமே!
பன்னுஞ் சோம சுந்தரனே!
பனுவற் பிராட்டிக் கரசளிக்கப்
பரிந்து வருக வருகவெனப்
பண்ணிற் கூவாய் பூங்குயிலே! (6)

### ஆரியதிராவிடசங்கம் அமைத்தோனைக் கூவுகஎன்றது

காலங் கடந்த தொன்மையுடன்
கடவுட் டன்மைப் பெருமையினாற்
கற்றோர்க் கறமும் பொருளின்புங்
கவினார் வீடுந் தான்றருவாள்
மூல மொழியாய் முன்னின்றாள்
மூவர் போற்றச் செம்மாந்து
முந்நீ ருலகு முழுதாண்ட
முன்னாட் போல விந்நாளும்
சாலச் சிறந்து தலையெடுக்கச்
சங்கம் வளர்த்த சதாசிவனே!
தனிச்சிங் களமாம் மலைப்பாம்பு
தாயை விழுங்கப் புகுந்ததுகாண்!
ஓலம் வெண்ணெய்க் கண்ணனெனு
மொப்பில் புலவன் மெய்காப்ப
ஒல்லை வருக வையாவென்
றுவந்து கூவாய் பூங்குயிலே! (7)

( தொடர்ச்சி 5-ம் பக்கம் )

# திருவண்ணுமலையிற் கார்த்திகைத் தீபம்

## சோதி வடிவாய்ச் சிவபிரான் தோன்றிய திருநாள்

கார்த்திகை மாசத்தில் வரும் பூரணையில் வருவது விளக்கீடு, அன்று இல்லங்கள் தோறும் விளக்குகள் ஏற்றப்படும். கோயில்களில் அதுவும் சிவன்கோயில்களில் மாலையில் தீபங்கள் ஏற்றி விழாக்கள் எடுத்து கோயில் வாசலில் சொக்கப் பான எரிப்பார்கள். கார்த்திகை மாசத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரத்தில் முருகன் கோயிலிலும் ரோகிணி நட்சத்திரத்தில் திருமாலின் கோயிலிலும் இப்படியே குமராலய தீபம் வைஷ்ணுவாலய தீபம் முறையே நடைபெறும். கார்த்திகை முருகனுகிய கார்த்திகேயனுக்கும் ரோகிணி திருமாலாகிய விஷ்ணுவிற்கும் முக்கியமான தினங்களாகும். திருவண்ணுமலையில் விளக்கீட்டிற்கு முதல்நாள் இரவு தொடங்கி மறுநாள் இரவு முடியும் வரைக்கும் கணக்கற்ற நெய்க்குடங்கள் ஊற்றி மலையின் உச்சியில் தீபம் ஏற்றப்படும். முன்னெருகால் பிரமாவும் விட்டுணுவும் தம்மில் யார் பெரியர் என்று அமர் புரிந்தபோது சிவன் ஒரு பெரும் சோதி வடிவாய் இருவருக்கும் இடையில் தோன்ற பிரமா மேலும் விட்டுணு கீழும் அடி முடி காண முயன்று தயங்கினர் என்பது புராணம். இவ் வண்ணுமலையே சோதிவடிவாய்த் தோன்றியது. இங்குள்ள இலிங்கம் சோதி லிங்கம் என்பர். இதை ஞாபகப்படுத்த மலையின் உச்சியில் தீபம் வைப்பது. கார்த்திகை விளக்கீட்டின் மகிமை இதுவே. இலங்கையிலும் தமிழ்மக்கள் கார்த்திகை விளக்கீட்டிற்குத் தங்கள் இல்லங்களைத் துலக்கியும் புதுப்பித்தும் தீபங்கள் ஏற்றியும் கோயில்களில் விழா எடுத்தும் சொக்கப் பான எரித்தும் கொண்டாடுவார்கள். இலங்கையின் தென் கீழ்ப் பாகத்திலுள்ள கதிர்காமத்திலும் கார்த்திகைப் பூரணையில் "இல மகா காச்சி மங்கலய" எனப்படும் திருநாளை சிங்கள மக்கள் கொண்டாடுவார்கள். அனேக சைவர்களும் அங்கு சென்று விரதம் அனுஷ்டித்து மா விளக்குப் போட்டுப் பூசைகள் ஆற்றி கதிரேசனை வழிபடுவார்கள். கதிரமலையின் உச்சியில் தீபமும் ஏற்றுவார்கள். தீபாவலிககு தீபவரிசையும கார்த்திகைத் தீபத்திற்குப் பெரும் தீபமும் ஏற்றுவார்கள். இதைவிட கோயில் வாசலில் தென்னேலைகளை ஒருஉயரமான தடியைச் சுற்றிக் கட்டி நட்டு தீ வைத்து எரிப்பார்கள். ஆங்கிலத்தில் "Bonfire' எனப்படும். இதை நாம் சொக்கப்பான என்போம். சொக்கன் என்பது சந்திரனை, பான என்பது தீபத்தை எனலாம். சிங்களத்தில் பான என்பது கைவிளக்கை. கார்த்திகை மாசத்தில் பூரணையில்தான் இது எரிப்பது. சொக்கப்பான கார்த்திகை மாசத்தில் மாத்திரம் எரிப்பதற்கும் சிவன் சோதியாய்க் காட்சி அளித்தற்கும் தொடர்பு உண்டுபோலும். கார்த்திகை மாசத்தில் சூரியன் விருச்சிகத்தில் நிற்பது. விருச்சிகம் தேள். இந்த மாசத்தில் சந்திரன் பூரணையாவது இடபத்தில் கார்த்திகை ரோகிணியில்தான். இதனுல்தான் கார்த்திகை மாசம் எனப்படுவதும் இடபத்தில் சந்திரன் உச்சம் இதனுல் சந்திரன் இடபத்தில் மற்ற இராசிகளிலும் பார்க்க கூடச்சஞ்சரிக்கும். அனுபவத்தைக் கொண்டு ஆராயும்போது திருக்கார்த்திகை நாள் சிவயோகிகளுக்கு மிகவும்

சௌரிராயன்

உவந்த நாளாகும்! இச் சந்திரகலை மிக உச்சமான நிலையிலிருக்கும் நாள் சிவ வழிபாட்டிற்கு அதிகம் பொருத்தமான தினமாகும். இதனுல்தான் சிவனின் சிரசில் சந்திரன் அமைந்ததுபோலுங். சந்திரன் பொதுவாகப் பெண்ணிற்கு முக்கியம். பெண்ணிற்கு கருணை அன்பு அருள் மிகவும் உண்டு. இவை யாவும் அம்பாளில் காணலாம். அம்பாள் இல்லாது சிவனைக்காண இயலாது. மனுஷன் இல்லறம் நடத்த இல்லம் வேண்டும்; இல்லாள் இல்லாது இல்லம் இல்லை. இதனுல்தான் விளக்கீட்டிற்கு இல்லங்களைச் சிறப்பிப்பது போலும்; இது மிகப் பழங் கால வழக்கம். தமிழரின் பண்பாட்டில் முக்கியமான இடம்பெறும். சிவயோகி தம்முள் காணும் மதி ஒளியின் சின்னமே சொக்கபான எனலாம்.

——


## தொழில் நுட்பக் கலாசாலை

(SCHOOL OF TECHNOLOGY)

"சிற்றுடெல்" சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

எங்கள் நாட்டின் பொருளாதார விருத்திக்கும், கல்விகற்றும் தொழிலின்றித் தவிக்கும் இளைஞர்களுக்கு வழிகாட்டவும், தமக்கும் தம் தாய் நாட்டுக்கும் பயனுள்ள வகையில் அவர்களைப் பயிற்றவும் இக்கலாசாலை பணி செய்கின்றது தமிழ்ச் சமுதாயத்தை எதிர் நோக்கி நிற்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டின் இளைஞர்களின் நோக்குப் புதிய திசையில் திரும்பவேண்டும்,

### தொழில் நுட்பக் கலையே எதிர்காலத்தில் ஈடேற்றம் தரவல்லது

1. மின்சார சாதனை அமைப்பு வேலை
2. தன்னியக்கிகளின் பொறியியல் கல்வி
3. வானெலிக் கருவிகளைப் பேணும் முறைகள்
4. மின்சார பொறியியலில் சாதனைப் பயிற்சி
5. பொறியியல் சம்பந்தமான வரைதல்
6, அளத்தல் படம்போடுதல் மட்டமாக்குதல் முதலிய உலாந்தாக்கல்வி
7. கட்டட அமைப்பு, திட்டப்படங்கள் வரைதல் முதலியன,

இன்னேரன்ன கலைப்பயிற்சி இக்கலாசாலையில் பெறலாம். பயிற்சித்திட்டங்களை விளக்கும் சூசனப்பிரதிகள், கலாசாலையிற் சேரவேண்டிய விண்ணப்பப்பத்திரங்கள், கலாசாலைக் காரியாலயத்திற் பெற்றுக்கொள்ளலாம்,

கலாசாலை அதிகாரி.


## இறைவன் அருள்மழை பெய்யும் முறை

( முற்றெடர் - )

இறைவன் தனது அடியார்களைச் சோதித்த பின்னர் அடியார்கள் மனமகிழ அருள் மழை பொழியும் தன்மையன் என்பதற்குச் சான்றுகள் பலவுள. இதே போன்று தனது அடியாரான கணேசையர் அவர்கள் மனமகிழ்ச்சிகொள்ள வேண்டி முதலிற் சோதனை புரிந்தார்போலும்.

பாட்டுக்களினுல் இறைவனை வசப்படுத்திவிடலாம் என்பதனைச் சமய குரவர்களின் வாழ்க்கை எடுத்தியம்புகின்றது. அதேபோன்று ஐயர் அவர்கள் மன முருகிச் செய்த பாடலினுல் "அடியவனுன கணேசையனைச் சோதித்தது போதும் இனி அவனுக்கு அருள் புரிவோம்" என்ற இறைவனின் எண்ணத்தினுலோ என்னவோ அடுத்த நாட்காலை ஆனை முகத்தண்

ஸ்ரீ. இ. சுந்தரராஜ சர்மா

ணல் தனது கோட்டாலே குத்தி நீர் வாராத அக் கூபமதில் நீர் ஊற்றுக் காணக் கூடியதாகச் செய்தார்.

கிணறு தோண்ட வந்த தொழிலாளிகள் இந்த அதிசயத்தை ஐயர் அவர்களுக்குத் தெரியப்படுத்தினர். அவர் விநாயகப் பெருமானின் திருவருட்திறனை வியந்து அவன்அடிதொழுதேத்திய பின்னரே கிணற்றினைப் போய்ப் பார்த்தார்.

காட்டுத் தீ போன்று இச் செய்தி எங்கும் பரவியது. இவ்வதிசயத்தைக் கண்ட மக்கள் பக்தித் திறனை வியந்தனர். இதிலிருந்து நாமுணரக்கூடிய உண்மை எதுவெதுனில் உள்ளன்புடன்கூடிய பக்தி நெறிவழி ஒழுகினுல் இறைவன் திருவருள் நமக்குப் பரிபூரணமாகக் கிட்டும் என்பதேயாம்,

வெளிச் சடங்கும் ஆடம்பரமும் பக்தியாக இருக்க முடியாது. மற்றவன் என்னைப் பக்திமானுக மதிக்க வேண்டும் என்ற கருத்தில் வேஷம் போடுபவன் பக்திமானல்லன். உண்மையான பக்தியை அடக்கத்திலே காணலாம். ஒருவன் தன் உள்ளத்திற்கு விரோதமில்லாத முறையில் அன்புடன் கூடிய அறநெறி நின்று ஒழுகுங்கால் அது பக்தியாகக் கருதப்படுவதில் அர்த்தமுண்டு.


இழந்த பலத்தைத் திரும்பக் கொடுக்கிறது!

## பலவிருத்திக் குளிகை

இது ஆச்சரியமான குணம் உடையது

அசதி, பலவீனம், உடல்மெலிவு, நரம்புததளர்ச்சி, மறதி தாது பலவீனம் முதலியவைகளை நீக்கி புதிய இரத்தத்தை நரம்புகளுக்குள் புகுத்தி இழந்துபோன பலத்தையும் வலிமையையும் மீட்டிக் கொடுத்து வாழ்க்கையை வளம்பெறச் செய்விக்கிறது. 120 குளிகை புட்டி 1 க்கு ரூ. 12-00,

## மூல வியாதிக்கு

நாக பஸ்பம், கருணை லேகியம் சாப்பிடுங்கள்

ஆப்ரேஷன் அவசியமில்லை. முளை தானே கரைந்துவிடும்.

சீழ் மூலம், இரத்தமூலம், மலபந்தம், குத்தல் கடுப்பு முதலிய 9-வித மூல வியாதிகளும் குணமாகிறது.

பஸ்பமும், லேகியமும் 24 நாள் செட் விலை ரூ. 20-00

மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S.I.



சங்கானை

அரசடி வயிரவர் கோவில்

### தேர்த்திருப்பணி விஞ்ஞாபனம்

சிவநேயச் செல்வர்காள்!

சங்காவன அரசடியில் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் வயிரவப்பெருமானுக்குத் தேர்த் திருப்பணி ஆரம்பமாகி நடைபெறுகின்றது. இத் திருப்பணியைப் பூர்த்தி செய்யத் திரவியம் வேண்டி இருப்பதால் சிவநேயச் செல்வர்களை உதவி செய்யும் வண்ணம் வேண்டுகின்றேம். பணம் பெறுபவரிடம் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

பணம் அனுப்புபவர்கள் கீழ் காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

இங்ஙனம்,

பொ. அப்பாத்துரைஐயர்.

அரசடி வயிரவர்கோவில்,

சங்கானை,

F 191 19-9-60.


## ஸ்ரீ அமிர்தேஸ்வரப் பெருமான் கோயிலில் சோமவார வழிபாடு

சிதம்பரம் நவ. 22

திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமாகவுள்ள சிவாலயங்கள் 27-ல் ஒன்ருகவும், மார்க்கண்டேயருக்காக காலனை உதைத்துள்ள ஸ்தலமாகவும், ஸ்ரீ அபிராமிபட்டருக்காக அமாவாசைத் தினத்தன்று பூர்ண சந்திரனை உண்டாக்கிய ஸ்ரீ அபிராமிஅம்பாளின் ஸ்தலமாகவுள்ள திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தேஸ்வரப் பெருமானுக்கு கார்த்திகை முதல் சோமவாரதினமாகிய நேற்று (21-11-60) மாலை தருமை ஆதீனம் 25-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 1008 சங்காபிஷேக மகோற்சவத்தைச் சிறப்பான முறையில் நடத்தி வைத்துள்ளார்கள்.

(திரு. மா. பா. தினமணி நிருபர்)

### விவாகம்

நல்லூரைச் சேர்ந்த திரு. C. V. வைத்தியலிங்கம் தம்பதிகளின் மூத்தபுத்திரனும், கொழும்பு சுங்க இலாகாவைச் சேர்ந்தவருமான திரு. சஞ்சீவிலிங்கம் அவர்கட்கும், ஐயனர்கோவிலடி திரு. இராசரெத்தினம் தம்பதிகளின் இரண்டாவது புத்திரியான சௌ. ஞானம்பிகை அவர்கட்கும் விவாகம் சைவாசாரபடி புதன்கிழமை (23-11-60) முற்பகல் நல்லூர் சிவன் கோவிலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அன்று மாலை மணமகனில்லத்தில் நிகழ்ந்த விருந்துபசாரத்தில் அன்பர்களும் சுற்றத்தவர்களும் பங்குபற்றி மணமக்களை ஆசீர்வதித்தனர்.

மணமக்கள் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடுழி வாழ எல்லாம்வல்ல இறைவன் அருள்பாலிப்பாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடைவு நகைகள் ஏல விற்பனவு விளம்பரம்


S. V. & Sons. V. இராசசேகரம் 42. K. K. S Road. அடைவு கடையில் தவணைதப்பிய அடைவுகள் 1954 மார்கழி துவக்கம் 1958 மார்கழி முடிய அடைவுவைத்து மீட்கப்படாத நகைகளை 1960-ம்ஸூ டிசம்பர்மீ (மார்கழி, 22உ வியாழக்கிழமை (22-12-60) காலை 10 மணிக்கு மேற்படி கடையில் எடுபட்ட நகைகள் நீங்கலாக மீதி நகைகள் பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

| அடைவு நம் | ஆ | மீ | உ | ரூ. ச. | பெயர் | விலாசம் | அடைவு பொருள் விபரம் |
|---|---|---|---|---|---|---|---|
| L. 7180 | 1954 | மார்கழி | 29 | 50 00 | V. T. நடராசா | கொல்லங்கலட்டி | கல்வைத்த பென்டன் 1 |
| 8005 | 1955 | மாசி | 12 | 60 00 | M. T. Alexander | 4th X St. Jaffna | கம்பிக்காப்பு சோடி 1 |
| 9164 | ,, | வைகாசி | 23 | 120 00 | சீனிவாசகம் அழகரத்தினம் | மாகியப்பிட்டி | முறுக்குச்சங்கிலி 1 |
| 9600 | ,, | ஆனி | 27 | 90 00 | ,, ,, | ,, | அச்சுக்காப்பு சோடி 1 |
| 9798 | ,, | ஆடி | 11 | 45 00 | கந்தையா வயிரமுத்து | கொட்டடி | நெளிக்காப்பு சோடி 1 |
| 9851 | ,, | ,, | 15 | 45 00 | கந்தையா செல்வரத்தினம் | கூளாவடி ஒழுங்கை கொட்டடி | புரூச் 1 |
| M 513 | ,, | புரட்டாதி | 7 | 150 00 | இராமலிங்கம் கணபதிப்பிள்ளை | இடைக்காடு | சங்கிலி ஒன்று கல் இருதயத்துடன் S. இலலை |
| 694 | ,, | ,, | 21 | 20 00 | வடிவேலு சந்திரநாதன் | மீசாலை | மோதிரம் ஒன்று |
| 2800 | 1956 | பங்குனி | 31 | 65 00 | சீனிவாசகம் அழகரத்தினம் | மாகியப்பிட்டி | கம்பிக்காப்புசோடி 1 |
| 3328 | ,, | வைகாசி | 28 | 50 00 | சின்னத்துரை கனகு | புதுரோட் கொட்ட டி | நெக்லேஸ் ஒன்று |
| 3553 | ,, | ஆனி | 19 | 30 00 | இராமலிங்கம் நடராசா | திண்ணவேலி தெற்கு | சிறுபிள்ளைக் காப்பு ஒன்று |
| 4160 | ,, | ஆவணி | 10 | 20 00 | கந்தையா கனகரத்தினம் | கோண்டாவில் மேற்கு | மோதிரம் 1 |
| 4394 | ,, | ,, | 28 | 160 00 | சீனிவாசகம் அழகரத்தினம் | மாகியப்பிட்டி | அச்சுக்காப்பு சோடி 1 சுரை இல்லை, மோதிரம்1 குண்டுவைத்த சிறு மெடல் 2 |
| 4395 | ,, | ,, | ,, | 140 00 | சீனிவாசகம் அழகரத்தினம் | மாகியப்பிட்டி | தாலிக்கொடி ஒன்று அச்சரக்கூட்டுடன் |
| 4790 | ,, | புரட் | 27 | 250 00 | ,, ,, | ,, | சங்கிலி 1 ½டலர் உள்பட புரூச் 1 |
| 5071 | ,, | ஐப்பசி | 20 | 110 00 | ,, ,, | ,, | கம்பிக்காப்பு சோடி ஒன்று நெளிக்காப்பு சோடி 1 |
| 7136 | 1957 | சித்திரை | 11 | 250 00 | சிவஞண்டி சுப்பிரமணியம் | 3. பெரியகடை | டைமன் அட்டியல் 1 பதக்கத்துடன் |
| 7453 | ,, | வைகாசி | 14 | 55 00 | முருகேசு ஐம்புகேசன் | கீரிமலை | சிறுபிள்ளைக்காப்புசோடி 1 முறிவு |
| 9170 | ,, | ஐப்பசி | 5 | 150 00 | நமசிவாயம் சிவரத்தினம் | அராலி கிழக்கு | கல் நெக்லேஸ் ஒன்று |
| 9240 | ,, | ,, | 10 | 30 00 | வேலு சுப்பிரமணியம் | 68. K. K. S. Rd | மோதிரம் ஒன்று |
| N 1254 | 1958 | ஆடி | 4 | 25 00 | சின்னத்துரை தம்பித்துரை | 3/34 Chetty St. நல்லூர் | சிறு |
| 1838 | ,, | புரட் | 13 | 40 00 | வயித்தி சண்முகம் | சுன்னாகம் | தாலி 1 [பிள்ளைக்காப்பு சோடி 1 |

விற்பனவு திகதி: 1960-ம்ஸூ டிசம்பர்மீ (மார்கழி) 22உ வியாழக்கிழமை (22-12-60)

வி. செ. குட்டிப்பிள்ளை,
வெந்தீஸ் மேஸ்தர் 29-11-60.

M 151 2, 9-12-60.




## உங்கள் நக்ஷத்திரம்?

[ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது] எங்கள்சோதிடம்
இவ்வாரப் பலன்கள் 4-12-60—10-12-60

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

காணிகள் காணிப்பொருள்கள் மூலம் இலாபங்கள் இந்தவாரம் நிச்சயம், புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும், ஆனால் தேகசுகம் பற்றி எச்சரிக்கையா யிருக்கவும். வயிற்றுக் கோளாறுகளுக்கிட முண்டு. பிதாவழி இனத்தவர் உமக்குச் சிறிது கோபமுண்டாக் கக்கூடும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

குடும்பச் சூழலில் இந்த வாரம் சண்டைகளுக்கும் பிழைஎண்ணங் களுக்கும் இடமுண்டு. தேகசுகமும் பழுதாகக்கூடும், மாதாவழி இனத்தவர் முரண்பட்டு நிற்பார்கள். குடும்பக் கருமக்கள் சிறிதும் திருத்தியாயிருக்கமாட்டா.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ம் பாதம்.

கருமங்களை எந்த வழியிலும் தீர்மானிக்க முடியாது இந்த வாரம் வருத்தப்படுவீர். தேகசுகம் சிறிதும்திருத்தியாயிருக்கமாட்டா பணத்துறையில் ஒரு நல்லவாரம், ஆரம்ப இடைஞ்சல்களினால் மனந் தளரவேண்டாம்,

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

குடும்பச் சூழலில் இந்த வாரம் சண்டைகளுக்கிட முண்டு, கண் நோய்களுக்கும் இடமுண்டு. ஆனால் உத்தியோகத் துறையில் ஒரு நல்ல வாரம். பகைவர் அழிவுக்கிடமுண்டு. புதுமுயற்சிகள் தாமதிக்கப்படும். ஆனாற் சித்தியாகும்,

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

குடும்பக் குழப்பங்களுக்கிட முண்டு. ஆனால் உத்தியோக வியாபார கருமங்களுக்குஒருநல்ல வாரம். கமத் தொழில் மூலமும் காணிகள் மூலமும் இலாபங்கள் நிச்சயம். ஆனால் உமது மனம் அமைதியாயிருக்கமாட்டாது.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

கல்விமுயற்சிகளில் இந்தவாரம் சித்தி நிச்சயம். புதுமுயற்சிகள் சித்தி தரும். ஆனால் ஆரம்ப இடைஞ்சல்களின் பின்புதான். பகைவர் அழிவுக்கும் இடமுண்டு,

**துலாம்**, சித்திரை 3 4ம் பதாம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

கமத்தொழில்முயற்சிகள்மூலம் இலாபங்கள் இந்தவாரம்நிச்சயம். பழைய முதலீடுகள் நல்ல இலாபம் தரும். ஆனால் சிறு சுகவீனங்களுக்கும் பிதாவழி இனத்தவர்மூலம் தொந்தரவுகளுக்கும் இடமுண்டு. வாரத்தின் முதல் நாளைக் கவனமாய்க் கழிக்கவும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

தேக சுகம் சிறிதும் திருத்தியாயிருக்கமாட்டாது, கந்தோரில் தொந்தரவுகளுக்கும் இடமுண்டு. ஞாயிறு பிற்பகல் திங்கள் செவ்வாய் கவனமாய்க் கழிக்கவும், வார மிகுதி உத்தியோக கருமங்களுக்கோ வியாபார கருமங்களுக்கோ நல்லாயிருக்கும்,

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

குடும்பக் கருமங்களும் சொந்தக் கருமங்களும் இந்த வாரம் குழப்பமாயிருக்கும். குடும்பச் சூழலிற் சண்டைகளுக்கும் பிழை எண்ணங்களுக்கு மிடமுண்டு. பிதாவழிஇனத்தவர்உமக்கு அதிக கோபமூட்டுவர். புதன் வியாழம் வெள்ளிகாலை கவனமாய்க் கழிக்கவும்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

பகைவர் அழிவுக்கிடமுண்டு. பழைய முதலீடுகள் நல்ல பலனைத் தரும். ஆனால் சுகவீனங்களுக்கிடமுண்டு. வெள்ளிபிற்பகல் சனி கவனமாய்க் கழிக்கவும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

உம்முடைய கருமங்களில் சிறிது எதிர்ப்பை இந்த வாரம் நீர் முன்னிடவேண்டிவரும், புது முயற்சிகள் தாமதிக்கப்படும், ஆனால் சித்தியாகும் இடைஞ்சல்களிலிருந்து நீங்க நண்பர்கள் உதவுவார்கள், தனலாபங்கள் நிச்சயம்,

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

இனத்தவர்களுடன் இந்த வாரம் சண்டைகளுக்கிடமுண்டு. ஆனால் நீர் விருப்புகிறபடி கருமங்களைக் கையாளக்கூடியதாயிருக்கும். போட்டியிடுவோரை வெல்லுதற்கிடமுண்டு. உத்தியோக சித்திக்கும் இடமுண்டு.

## மயிலாடுதுறையில் துலா மகோற்சவ விழா

சிதம்பரம். கார். 17

செந்தமிழ் நாட்டில் மாயூரம் என வழங்கும் மயிலாடுதுறையில், திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்திற்ச் சொந்தமாகவுள்ள ஸ்ரீ கௌரி மாயூரநாத சுவாமி சிலாலயத்தில் துலாமஹோத்சவ விழா வழக்கம்போல் சிறப்புடன் நடைபெற்றுள்ளது. துலாமாதப் பிறப்பன்று ஸ்ரீ அபயாம்பிகா சமேத ஸ்ரீ கௌரிமாயூரநாத சுவாமி விருஷபாரூடராய் எழுந்தருளி காவிரிநதியின் இடப தீர்த்த கட்டத்தில் தீர்த்தம் கொடுத்தார். அச்சமயம் நகரமக்கள் பெருந்தொகையினர் கூடித் துலா மாதப்பிறப்பு புண்ணிய கால ஸ்நானம் செய்தனர். பின்பு ஸ்கந்தசஷ்டி விழா, விநாயகர் மஹோத்சவம் நடைபெற்றது. ஸ்ரீ அபயாம்பிகை சமேத ஸ்ரீ கௌரிமாயூரநாதரின் துலாமஹோத்சவம் 21-11-60ல் ஆரம்பமாகி தினசரி விழா நடைபெற்றுக் கொண்டு வந்து ஐப்பசி 30-ம் தேதி 15-11-60 அன்று ஸ்ரீ அபயாம்பிகை சமேத ஸ்ரீ கௌரிமாயூரநாதர் துலா மாதக்கடைசிநாள் புண்ணிய கால தீர்த்தம் கொடுத்தருளினார்.

(திரு. மா. பா. தினமணிகிருபர்)

யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14

## தனித்தியங்கும் பாடசாலைகள்

நாற்பத்திரண்டு கத்தோலிக்க பாடசாலைகள் உட்பட 50 முதலாம் இரண்டாம் பிரிவு பாடசாலைகள் தனித்தியங்க முடிவு செய்துள்ளன. யாழ்ப்பாணக்கல்லூரி, சென்றஜோன்ஸ்கல்லூரி, சம்பத்திரிசியார் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி முதலியவை இவற்றுளடங்குகின்றன.

## இராமநாதன் நினைவு நாள்

யாழ்ப்பாணம் சைவ மங்கையர் சுழகத்தாரால் நேற்று இராமநாதன் நினைவு நாள் கொண்டாடப் பெற்றது வழக்கமான முறையில் குருபூசை காலையிற் சிறப்பாகச் செய்யப்பெற்றது. ஊர்வலத்துடன் பகிரங்கக் கூட்டமொன்றும் மாலை 5-30 மணிக்கு ஸ்ரீமதி. ம. ஸ்ரீகாந்தா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்பு "அப்பூதி அடிகள்" என்னும் பொருளில் புலவர் திரு.த.குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் சிறந்த சுதாப்பிரசங்கமொன்று செய்தார்கள்.

## போட்டி இன்றித் தெரிவு

வேலணைக் கிராமச்சங்க, ஒன்பதாம் வட்டாரத்திற்கு திரு. ப, கந்தசாமி அவர்கள் போட்டி இன்றி அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். திரு. கந்தசாமி இவ் வட்டாரத்தின் அங்கத்தவராகவும், சங்கத்தின் உபதலைவராகவும் கடமையாற்றியவர்.

மற்றொரு பகுதியான நாரந்தனைக் கிராமச்சங்கத்தின் முதலாம் வட்டாரத்திற்கு திரு. க. அருளம்பலம் அவர்களும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## கோணேஸ்வரர் ஆலயத்துக்கு நிதி உதவி

கோணேஸ்வரர் ஆலயப் புனருத்தாரண வேலைக்கு கலாசார அமைச்சு ரூபா 60,900 நிதி உதவி செய்யுமென்று அறியவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய - அமெரிக்க நல்லுறவுக்கு அரும்பாடுபட்ட ஒருவர்

## கலை உலகில் பெரும்புகழ் ஈட்டிய கலாநிதி ஆனந்தக்குமாரசுவாமி

கருங்கல் உலகிலேயே அவரது சிந்தனை நிறைந்திருந்தது. இருபத்தாறு வயது இளைஞர் ஆனந்தகுமாரசுவாமி இலங்கை கனிப்பொருள் "சேர்வையை" நடத்தி வைக்கும் பொறுப்பை ஏற்ருர் அப்பொழுதுதான் அவர் லண்டன் பல்கலைக்கழகத்தில் நில உள்ளியல் துறையில் சிறப்பாகத் தேறிப் பட்டம் பெற்றிருந்தார். அவர் மூன்ருண்டுகள் இலங்கைப் பாறைகளை ஆராய்ந்தார், லண்டன் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானப் பட்டமும் பெற்ருர்.

பிற்காலத்தில் அவரது திறமை விளங்கப்போகிறது என்பது அவர்களுடைய நண்பர்களுக்குத் தெரியும். எனினும் கொழும்பில் ஓர் ஆங்கிலத் தாய்க்கும் இந்து தந்தையாருக்கும் மகனுகப் பிறந்த இவர், இந்திய ஓவியத்தில் உலகில் தலை சிறந்த அறிஞர்களில் ஒருவராக விளங்குவார் என்று அவர்கள் நினைக்கவே இல்லை. தத்துவம், மதம், ஆகியவற்றில் சிறந்த அறிஞராகத் திகழ்வார் என்றும் அவர்கள் கருதவில்லை. அமெரிக்கப் பிரசையாகி, அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையே பண்பாட்டுப் பாலம் அமைப்பார் என்றும் அவர்கள் நினைக்கவில்லை.

1906-ம் ஆண்டில் குமாரசுவாமி நில உள்ளியல் அளப்பை முடித்துவிட்டு முதற் தடவையாக இந்தியாவுக்குச் சென்ருர். இந்தியாவின் கலைச் செல்வம் வெளி நாடுகளின் மக்களை மிகவும் கவர்கிறது. அவை நில உள்ளியல் கலைஞர் குமாரசுவாமியையும் கவர்ந்தன. அவர் தாமே தேர்ந்தெடுத்து பயிற்சி பெற்றிருந்த தொழிலை விட்டுவிட்டார்.

இந்திய ஓவியக் கலைஞரின் படைப்புகளைப்பற்றி அறிவதிலும், அவற்றைத் தொகுப்பதிலும் அவர் தமது வாழ்நாளை செலவிடத் தொடங்கினுர். 1910 ஆண்டுக்குள் அத்துறையில் அவர் புகழ் சிறிது பரவிற்று. எனவே அவர் உத்திரப் பிரதேசத்துக் கண்காட்சி ஒன்றின் ஓவியப் பிரிவுக்குத் தலைவராக்கப்பட்டார். கல்கத்தாவில் அவர் இந்திய ஓவியம்பற்றி விரிவுரைகள் நிகழ்த்தினுர். அவற்றைக் கேட்டவர்கள் வியப்புற்ருர்கள். உப-ராஷ்டிரபதி இராதாகிருஷ்ணன் உட்பட சிலர் இந்தியாவின் மறுமலர்ச்சிக்குக் காரணமாய் இருந்தவர்களில் அவர் ஒருவர் என்று கருதுகின்றனர்.

1917 ல் "டாக்டர்" குமாரசுவாமி அமெரிக்கா சென்ருர். அவர் அங்கு சென்றபோது இந்திய ஓவியப் பொருள்கள் பலவற்றையும் எடுத்துச் சென்ருர். பாஸ்டன் நகரிலுள்ள நுண்கலை அரும்பொருள் களஞ்சியம் அவருக்கு ஆதரவளிப்பதாயிற்று. பாஸ்டன் நெடுங்காலமாக அமெரிக்க தலைநகரமாக இருந்து வருகிறது. அங்குள்ள நுண்கலை அரும் பொருள் களஞ்சியம் 1870ம் ஆண்டில்தான் நிறுவப்பட்டது. எனினும் அது அமெரிக்காவின் மிகச் சிறந்த கலைக் கூடங்களில் ஒன்ருக விளங்கிற்று. அங்கு ஆனந்தகுமாரசுவாமி இந்திய பாரசிக, மகமதிய ஓவியங்களில் ஆராய்ச்சி நடத்துவோராக ஏற்படுத்தப்பட்டார். அவர் லூயிஸா ரன்ஸ்டெயின் எனும் பெண்மணியைத் திருமணம் செய்துகொண்டார். முப்பதாண்டுகள் அதாவது அவர் தமது எழுபதாவது வயதில் 1947 ல் இறக்கும்வரை அமெரிக்காவையே

### ஜான் டி. ரீட்

தனது நாடாகக் கொண்டு அங்கு வாழ்ந்தார். அவர் இல்லம் பாஸ்டனுக்குப் பன்னிரண்டு மைல் தூரத்திலுள்ள நீடாம் என்னும் அமைதியான ஊரில் இருந்தது.

பலவகைகளில் அவர் அருஞ்செயல்கள் செய்துள்ளார் அவற்றையெல்லாம் தொகுத்து உரைப்பது எளிதன்று. பாஸ்டன் அரும்பொருள் களஞ்சியத்தின் இந்தியகலைத் தொகுப்பே அமெரிக்காவின் மிகச் சிறந்த கலைத்தொகுப்பாகும் இதற்கு முக்கிய காரணர் டாக்டர் குமாரசுவாமியாவார். பழங்கால வெங்கலச் சிறப்புக்களையும், களிமண் உருவங்களையும், மட்கலங்களையும், ஆபரணங்களையும், கற் சிலைகளையும் அரும்பாடுபட்டு அவர் தொகுத்து வைத்துள்ளார். ராஜபுதன் வர்ண ஓவியங்களும், கையெழுத்துச் சுவடிகளும் அவர் சேகரித்து வைத்துள்ளார். இந்தியக் கலைப்பொருள் தொகுப்பு, பாஸ்டன்

தொடர்ச்சி 6ம் பக்கம்)

## குயிலே தமிழ் காக்கக் கூவாய்

( 2ம் பக்கத் தொடர்ச்சி )

**மகாலிங்க சிவத்தைக் கூவுக என்றது**

கற்ருேரேத்துங் கலிக்குப்பின்
கம்ப நாடன் கவியமுதங்
கல்லார் சாலப் பொல்லாரே
கண்கள் கொண்டுங் காணுரே
வெற்றித் திருவும் மலர்த்திருவும்
விரும்பு மிராமன் றிருக்காதை
மேலாம் வாழ்க்கைக் கலையென்று
வெல்லம் நாண வவையரங்கிற்
குற்றம் பயிலா நகைச்சுவையிற்
குழைத்துக் குழைத்துத் தமிழ்வளர்த்த
கோதில் புலமை மகாலிங்க
குருவே தனிச்சிங் களமென்னும்
அற்றம் புகுந்த தறியீரோ
ஆசைத் தமிழ்த்தா யழுகின்ருள்
ஐயோ காக்க வருகவென
அமிழ்திற் கூவாய் பூங்குயிலே! (8)

**ஞானப்பிரகாச அடிகளைக் கூவுக என்றது**

அலைநீ ராடை நெடும்புவியி
லமைந்த பண்டை மொழிக்கெல்லாம்
ஆதி தமிழென் றரண்படுத்தி
அகர விகர வுகரமொடு
நிலையா மெகர முதலாக
நேரும் பிறவுஞ் சொற்பட்டு
நீர்மை திரியாப் பலபெயராய்
வினையாய்ப் பிறவாய் நிலைறந்ததிறம்
விலையின் மொழிநூற் களஞ்சியமாய்
மிளிரக் கன்னித் தமிழின்சீர்
விளக்கஞ் செய்த சொற்கலைஞா!
விருப்பு மொழிக ளாறிரண்டின்
கலைதேர் ஞானப் பிரகாச
அடிகாள் கன்னிப் பெருமாட்டி
கலச்கம் போக்க வருகவெனக்
கனிந்து கூவாய் பூங்குயிலே! (9)

**பூங்குயிலைப் புகழ்ந்தது**

உள்ள முருக்கும் வாசகத்திற்
குயிலே! யுனக்குத் தவிசிட்டார்;
உலகப் புலவோ ருன்வாயா
லுயர்ந்த பாடல் மொழிகின்ருர்;
தெள்ளித் தெளித்து வடித்ததமிழ்த்
தேனைப் பனுவல் தொறுமுண்பாய்;
தென்றற் செல்வன் மெத்தென்று
திளைக்கும் விடியல் திருத்தமுற
வில்லற் சினைப்பூங் கொம்பிருந்து
விளரி பயில்வாய்; விண்ணவரும்
விரும்பும் தமிழோ டுனக்குறவு
விதந்து பேச லினிவேண்டா
புள்ளும் மரமும் விலங்குமிதோ
புதுமை காண விலங்கையிலே
புலவர் குழாத்தை வருகவெனப்
புகன்று கூவாய் பூங்குயிலே! (10)

## நீதி மன்றங்களில் தனிச் சிங்களம்

யாழ்ப்பாணச் சட்டத்துறையினர் செய்துள்ள தீர்மானம்

யாழ்ப்பாணச் சட்டத்துறையினர் சென்ற புதன்கிழமை பிற்பகல் ஒன்றுகூடி நீதிமன்றங்களிற் சிங்களம் மாத்திரம் உபயோகிக்கப்படும் என்ற அரசாங்கத் தீர்மானத்தை எதிர்த்துப் பிரேரணை நிறைவேற்றியுள்ளனர். தமிழ்மக்கள் பெரும்பான்மையராய் வாழும் பகுதிகளில் நீதிமன்ற நிகழ்ச்சிகள் தனித் தமிழிலேயே நடைபெறுதற்கு வேண்டிய ஒழுங்கு செய்தல் வேண்டுமென்றும் அப்பிரேரணையிற் கேட்கப்பட்டுள்ளது. சட்டத்துறையினர் சங்கத்தலைவர் திரு. ஏ. வி. குலசிங்கமவர்கள் குறித்த பிரேரணையைப் பிரேரித்தார்கள்.

பருத்தித்துறை, மல்லாகம், சாவகச்சேரி, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களிலுள்ள சட்டத்துறையினரும் கூட்டத்திற் சமுகமளித்துப் பங்குபற்றினர்.

### சீதன ஒழிப்புச் சட்டத்திற் சிக்கல்

சீதனம் கேட்பது நேராயோ மறைமுகமாயோ சட்ட விரோதமாகும். மீறுவோர் ஐயாயிரம் ரூபா அல்லது ஆறுமாதச் சிறைத் தண்டனை விதிக்கப்படுவர் என்றும் ரூபா ஈராயிரத்துக்கு மேற்படாத உபகாரங்கள் மாத்திரம் கொடுக்கலாம் என்றும் அமைக்கப்பட்ட சட்டதிட்டத்தை இந்திய பாராளுமன்ற மேற் சபை அங்கீகரித்தது. ஆனால் நேராயோ மறைமுகமாயோ கேட்பது என்னும் பகுதியைக் கீழ்ச்சபை நீக்கியது. இந்நீக்கத்தை மேற்சபை ஏற்காமையால் சிக்கலொன்றுண்டாயிற்று. இச்சிக்கலை நீக்கும் வழிகாணும் பொருட்டு இரு சபைகளையும் ஒன்ருய்க்கூட்டுதற்குச் சனுதிபதி தீர்மானித்துள்ளார். கருத்து வேறுபாடு காணப்படும்பொழுது இவ்வாறு கூட்டுதலே இந்திய அரசியலமைப்பிலுள்ள முறையாகும்.

### ஈழ நாட்டுத் திருவள்ளுவர் சங்கம்

—0—

மேற்படி சங்க ஆண்டுவிழா 10, 11-12-60 சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் நடைபெறவிருக்கின்றது.

### துவிசக்கரத்தில் இருவர் பிரயாணம்

துவி சக்கரங்களில் இருவர் பிரயாணஞ் செய்ய அனுமதி கொடுக்கும்படி பிரேரணை ஒன்று யாழ்ப்பாண மாநகரசபையில் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உ

## சைவ பரிபாலன வித்தியாலயம்

### வியாவில் — காரைநகர்

ஞானசூரியனைப்போல் பிரகாசித்த நாவலர் பெருமானின் காலத்தில் சைவசமய விருத்திக்காக இவ் வித்தியாலயம் நிறுவப்பெற்றது.

நாம் வித்தியாலயப் பொறுப்பேற்ற 1925-ம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை தமிழ்மொழி விருத்தி, சைவசமய விருத்தி, நெசவு, தும்புக்கைத்தொழில் ஆதியாம் நற்பணிகள் செய்திருக்கின்ருேம் என்பதனை வித்தியா விருத்திபற்றிக் காலத்துக்குக்காலம் நடைபெற்ற பிரசாரக் கூட்டங்களினுலும தங்களுக்கனுப்பப்பட்ட அறிக்கைகளினுலும் அறிவீர்கள்.

தங்கள் ஒவ்வொருவரின் பெருமுயற்சியால் கடனில் அதிக பங்கு நீங்கினுலும், மேலும் ரூபா 1100/- வரை தங்கள் உதவியை எதிர்பார்க்கிறது. சென்ற ஆனி மாதம் சைவ அன்பர்கள் சேர்ந்து, சைவசமய விருத்திச் சபை ஒன்றை அமைத்து, தேவார வகுப்பு 6 மாசங்கள்வரை நடாத்தினுர்கள். வித்தியாலயம் 1960-ம் ஆண்டு மார்கழி மாசம் 1-ம் தேதி அரசாங்கப்பொறுப்புக்குள்ளாவதால் தேவார வகுப்பு போன்ற சமய விருத்திககருமங்களை எவ்வாறு நடாத்துவது என்பது பற்றித் தங்கள் கருத்தை ஒருமாத காலத்துக்குள் அறிவிப்பீர்களாயின் பெரும் நன்மையாகும்.

இங்ஙனம்,
தங்கள் உதவியை நாடும்
இ. நாகலிங்கம்,
மனேஜர்.

30-11-60

### பரீட்சையின்றி வகுப்பேற்றம்

வகுப்பேற்றப் பரீட்சைகளிற் காணவரும் பெறுபேறுகள்பற்றிச் சிந்திக்கக்கூடாது. மாணவர் வகுப்பிற் காண்பிக்கும் திறமை முதலியவற்றைக் கொண்டே மாணவரின் தகுதியை நிச்சயித்து வகுப்பேற்றஞ் செய்யவேண்டும் என்று, வித்தியாதிகாரி சுற்றறிக்கை ஒன்று பாடசாலைகளுக்கு அனுப்பியிருக்கின்ருர்.

### ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை

பதுளையில் நடந்த ஸ்ரீலங்கா இராசகுருசங்க மகாநாட்டில் தற்காலிக கல்வி மந்திரி ஸ்ரீ. வி. ரி. ஜி. கருணாரத்தின பேசும்போது ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை கொடுப்பதற்கு ஆட்சேபம் எதுவும் இல்லை என்றும், ஆனுல் ஏனைய அரசாங்க ஊழியர்களும் அவ்வாறு உரிமை தரும்படி கேட்கக்கூடும், அதனுல் சில இடைஞ்சல்களுண்டாகும் என்று குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கோயிலாக்கண்டிச் சிவன்கோயில் நிதி

| | ரூ. ச. |
|---|---|
| முன் சேர்ந்த தொகை | 696-65 |
| திரு. அ. கருணாகரன் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி) | 5-00 |
| திரு. R. இளையதம்பிமூலம் (பதுளை) | 10-00 |
| சைவப்பிரகாச யந்திரசாலை | 10-00 |
| | 721-65 |

# ஆசிரியர்களை அடிமை

முதற்பக்கத் தொடர்ச்சி )

கம் பலவாறு முனைகின்றது ஆசிரியர்கள் அடிமைகளாக மானமிழந்து வாழவேண்டியதில்லை. சுதந்திரமாக மானத்துடன் வாழ்தல் ஆசிரியரின் உரிமை. நாட்டு மக்களுக்குத் தேசியக் கல்வி கொடுக்க வேண்டியது அரசினரின் கடமை. இதை அந்தந்த மதஸ்தாபகர்களின் பதப் பாடசாலை அமைப்பைக் குழப்பாது கொடுக்கலாம். மதஸ்தாபன பாடசாலைகளிலோ, அரசினர் பாடசாலைகளிலோ உள்ள ஆசிரியர்களுக்கு சம்பளமோ, ஓய்வு உதவிப்பணமோ (பென்ஷன்) கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை.

இவ்வுரிமைகள் ஒருபுறமிருக்க, உதவிபெறும் பாடசாலைகளில் 1956-ம் ஆண்டுக்கு முன்பதாகச் சேர்ந்த ஆசிரியர்கள் எல்லோரையும் 1960-ம் ஆண்டில் அரசாங்க சேவையில் சேர்ந்தவர்களெனக் கருதப்பட்டு 1956-ம் 'சிங்களம் மாத்திரம்' சட்டத்துக்குட் பட்டவர்களாக்குவதற்குச் செய்த சதித்திட்டமே பாடசாலைகளை எடுக்கும் சட்டமும் அதன்படி அரசாங்கத்தின்கீழ் வேலை செய்தற்குச் சம்மதம் பெறும் செயலும் என நாம் நம்பக்கிடக்கிறது. இவற்றுக்கு அடங்க விரும்பாதோருக்கு, மற்றைய ஜனநாயக நாடுகளில் நடப்பது போல், நட்ட ஈடுடன் இளைப்பாற உரிமை கொடுக்கப்பட வேண்டும்.

இலங்கை சுதந்திரம்பெற்ற நாள்முதல், சிறி இலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிபீடம் ஏறியகாலம் வரையும் அரசாங்க உத்தியோகத்தருக்கு அரசியல் உரிமை வேண்டுமெனக்கருதி அரசாங்க ஊழியர்களின் இரட்சகர்களென நம்பப்பட்டோர் இன்று அரசியல் உரிமைகள் அனுபவித்துவருகிற ஆயிரக்கணக்கான ஆசிரியர்களை அரசியல் உரிமையற்ற அனாதர்களாக்கும் சதித்திட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்களென்பது அவர்களின் போலிச்சாதுவான எதிர்ப்பால் தெரியவருகிறது. இன்றைய அரசாங்கம் உண்மையில் சுதந்திரக் கட்சியின் பெயருக்கிணங்க அரசியற் சுதந்திரத்தை அரசாங்க உத்தியோகஸ்தருக்குக் கொடுக்க முன்வரவேண்டும்; அல்லது அரசாங்க உத்தியோகஸ்தர் உரிமைகளை இம்முற் போக்கு அரசாங்கத்திடம் பெற முன்வர வேண்டும். இன்றேல் உத்தியோகங்களில் அதி கௌரவ உத்தியோகமென உலகத்தாரால் கருதப்படும் ஆசிரியத் தொழிலாருக்காகிலும் அரசியல் உரிமைகள் யாவும் வழங்கப்பட வேண்டும். இந்நியாயமான

### சர்வகலாசாலை வெளி மாணவர் பரீட்சை

இலங்கைச் சர்வகலாசாலையில் வெளிமாணவர் பரீட்சை நடத்தும் திட்டமொன்றை அமைத்தற்கு விசேட குழு ஒன்றை இலங்கைச் சர்வகலாசாலையார் அமைத்துள்ளனர்.

—0—

கேள்விக்கு இவ்வரசாங்கம் செவி கொடுக்காவிட்டால் ஆசிரியர்கள் அரசாங்க பாடசாலைகளிலோ அரசாங்கம் பொறுப்பேற்கும் பாடசாலைகளிலோ தம் மானமிழந்து கடமையாற்றாது திருவள்ளுவர் வாக்குக்கிணங்க,

''உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்''

என்றபடி சுதந்திரமான உழவு தொழிலைக் கடைப்பிடித்தல் நன்று. இவ்விடயம்பற்றி அகில இலங்கை ஆசிரியர் சம்மேளனமும் அரசாங்கமும் சிரத்தை எடுக்க வேண்டும்.

— —

### அணிந்துரை அரங்கம்

**ஸ்ரீகாந்தா நாட்குறிப்புப் புத்தகம்**

**(டயறி) 1961**

பெறுமிடம்:
ஸ்ரீகாந்தா அச்சகம் புத்தகசாலை
213, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.
பிரதி விலை சதம் 75.

ஸ்ரீ காந்தா அச்சகம் — புத்தகசாலையார் வெளியிடும் இந்நாட்குறிப்புப் புத்தகமானது அரசாங்க, வங்கி, வர்த்தகஸ்தல விடுமுறைகள், இலங்கை அரசியல் அங்கம், இலங்கை பற்றிய பொதுவிபரம், இலங்கைக் குடிசனத்தொகை, இலங்கையின் மலைச் சிகரங்கள், நதிகள், பழைய தலைநகரங்கள், பூமியைப் பற்றிய அளவு விபரங்கள், உலகின் சனத்தொகை விபரங்கள், தபால் தந்தி விபரங்கள் என்பனவும் பிறவுமாய்ப் பொதுவாக அறியவேண்டிய பல விபரங்களுடன் ஒவ்வொரு பக்கமும் நனிசிறந்த அறிவுரை ஒவ்வொன்றையுமுடையதாய் நன்கு அமைந்திருக்கின்றது. பார்வைக்குப் புத்தகம் போன்ற அமைப்புள்ள இதை எவரும் விரும்பி வாங்குவரென்று கருதுகிறோம்.

—:—

# இராசகீரியின் அதிவீரச் செயல்

## பெரிய போரிலுண்டான அதிசயமான முடிவு

( முற்றொடர் )

கீரி: இது பாம்பைக் கொல்லும் பிராணியாகும். நமது நாட்டில் அதிகமாக உண்டு. கடவுளின் சிருஷ்டிகளில் நமக்கு நன்மையும் தீமையும் நடப்பதுதான் உலகம. இது உலகம் தோன்றிய காலமுதல் இன்றுவரை நடந்து வரும் செயலாகும். ஆக்கம் உண்டானுல் அழிவும் நிச்சயம். பாம்பைப் படைத்தவன் கீரியை ஏன் படைத்தான்? என்ற சிந்தனை என் மனத்தில் ஒரு நாள் உண்டானது. காரணம் பின்வருமாறு:—

1956ம் ஆண்டு ஆவணி மாதம் 24ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு வேலணையில் கடற்கரை அருகிலுள்ள எனது பனந்தோட்டத்துக்குச் சென்று ஒரு பற்றையின் மறைவில் மலங் கழித்துக்கொண்டிருக்கும் போது எனக்குச் சிறிது தூரத்துக்கப்பால் சீறும் சத்தம் கேட்டு, அத்திசையைத் திரும்பிப் பார்க்கும்பொழுது ஒரு பெரும்போர் நடந்து கொண்டிருந்தது எனது மனத்தில் பயம் தொடங்கியது. என்றாலும் இந்த வீரக் காட்சியைக் காண வேண்டுமென்ற எண்ணம் பயத்தை நீக்கியது. உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தேன். சண்டை உச்சநிலையை அடைந்து கொண்டேயிருக்கின்றது. மாமல்லர் யார்? அவர்கள் தான் பறநாகமும் கீரியுமாகும். பறநாகம் தனது வாலிற்ருன் நிற்கின்றது படத்தை எங்கும் பரப்பிக் கீரியின் தலையைத் தாக்கத் திட்டமிடுகின்றது. ஆனுல் கீரிகள் மூன்று பின் பக்கமும் வலம், இடம், இருபக்கமும் நின்றன. பாம்பின் தாக்குதலிலிருந்து தப்பிக் கொண்டேயிருக்கின்றன, கீரிகள் களைத்தமைபோலக் காணப்பட்டன. ஆனுல் சிறிது நேரத்தில் கீரிகள் இரண்டைக் காணவில்லை. ஒரு கீரி மாத்திரம் பாம்புடன் பொருதிக்கொண்டிருந்தது. பாம்பு படத்தைச் சுருக்கும்; கீரி வாலைக் கடிக்கும். உடனே பாம்புபடத்தை எடுத்துக் கொண்டு சீறிக் கீரியைத் தாக்கச் செல்லும். கீரி தூரத்துக்குச் சென்று தப்பிக் கொள்ளும். பாம்பு நகரத் தொடங்கவே எனது மனத்தில் பயம்மிகுந்தது. இந்தக் கோபமான நிலையில் பாம்பு என்னைக் கண்டால் என்ன செய்யும் என்று எனது மனம் கற்பனை செய்யத் தொடங்கி

விட்டது. என் கால்கள் பந்தயக் குதிரையின் கால்களைப்போல ஓட உத்தரவுக்குத் தயாராகிக்கொண்டிருந்தன. ஆனுல் மனம் சாட்சியின் முடிவுக்காகத் தடையுத்தரவு கொடுத்தது. இப்படியான சந்தர்ப்பத்தில் தூரத்தில் கீரிக்கூட்டம் வருகின்றது. இரண்டு கீரிகளின் முதுகுகளில் ஒரு சிறுபிராணி ஏறி வருகின்றது. வெள்ளை கலந்த சாம்பல் நிறமான பிராணி உருவத்தில் மற்றக் கீரிகளில் சிறியது. இவைகளின் வரவைக் கண்ட பாம்புடனின்ற தனிக் கீரி பாம்புடன் புதுபலத்துடன் சண்டை தொடங்கிற்று. பாம்பு படத்தை எடுத்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்ய, கீரிகள் கிட்ட வந்துவிட்டன. அந்த சிறு வெள்ளை கலந்த கீரி பாம்பின் தலைப் பக்கத்தால் பாய்ந்து மறுபக்கத்திலுள்ள கீரியின் முதுகில் விழுந்தது. அவ்வளவுதான் பாம்பின் ஆர்ப்பாட்டத்தைக் காணவில்லை அந்த வெள்

**விஷ வைத்தியர்**
**திரு. க. சிற்றம்பலம் அவர்கள்**

ளைக் கீரியின் முகத்தில் இரத்தம் தோய்ந்து காணப்பட்டது; அவ்வளவுதான் கீரிகள் வந்த வழியாகச் சென்றன; பெரிய ஆரவாரங்களுடன் வெள்ளைக் கீரி கீரிகளின் முதுகில்தான் செல்கின்றது. அவை ஒரு நொச்சிப் பற்றைக்குள் சென்றன. பாம்பு கிடந்த இடத்தை விட்டு நகரவில்லை. நான் மெல்ல மெல்லப் பாம்புக்குக் கிட்டச் சென்றேன். பாம்பு மூன்று துண்டாகக் கிடக்கக் காணப்பட்டது எனது சிந்தனை வெள்ளைக் கீரியைப் பற்றியே சென்றுகொண்டிருந்தது. எனது கருமங்களை முடித்துக்கொண்டு வீடு சென்று எனது தந்தையாரிடம் நடந்தவற்றை விபரமாகச் சொன்னேன். அப்பொழுது அவர் தம்பி! அந்த வெள்ளைக் கீரிதான இராசகீரி; மற்றக் கீரிகளால் கொல்ல முடியாத பாம்பை இராசகீரியைக்கொண்டுதான் கொல்லுவிக்கும். அதை மற்றக் கீரிகள் காவிக்கொண்டுதான் வரும் என விபரமாகச் சொன்னுர். கடவுள் "கூத்தன்" ஆகையாற்ருன் இப்படியான கூத்துக்களை நடக்கச் செய்கின்றுர் என இது உணரச் செய்தது.

**சிறு விஷ ஜெந்துக்கள்:-** சிறு விஷ ஜெந்துக்கள் பல நமது வீட்டில் வாழ்கின்றன. அவையும் நம்மைத் தாக்கும். அவை வண்டுகள், கறையான்கள் ஒருவகையான குளவியினங்கள், உண்ணிவகைகள், கரப்பன் பூச்சி வகைகள் முதலியனவாகும். இவற்றின் விஷங்கள் அற்பமென்றாலும், போதிய கவனம் எடுத்தல் வேண்டும்.

**முடிவுரை:** மேலே காணவந்த கட்டுரைகளில் நம் வீடுகளில் வாழும் விஷஜெந்துக்கள்பற்றி ஆராய்ச்சி மூலமும் அநுபவமூலமும் கண்ட உண்மைகளை மக்களுக்கு அறியத் தந்தேன், தங்கள் தங்கள் ஆற்றலுக்கேற்ப இவற்றைப் பயன்படுத்தித் தப்பி சுகபெலத்துடன் வாழ வேண்டியது மக்கள் கடமையாகும்.

— —

## இந்திய அமெரிக்க ...

5-ம் பக்கத் தொடர்ச்சி

அரும்பொருள் களஞ்சியத்தில் உலகத்தின் மிகச்சிறந்த கீழ்நாட்டுக் கலை தொகுப்பாக விளங்குகிறது. அரும் பொருள் களஞ்சியத்திலுள்ள இந்திய கலைச் செல்வத்தின் அட்டவணையை அவர் அழகாகத் தொகுத்து வைத்திருக்கிறார். அது நான்கு புத்தகங்கள் கொண்ட அட்டவணையாகும்.

அவர் எழுதியுள்ள நூல்களின் பெயர்களை மட்டும் தொகுத்துரைத்தாலும் இக் கட்டுரையின் அளவு விரியும். பௌத்த மத ஆராய்ச்சி, இந்தியக் கலையின் உட்பொருள் (சிவ நடனம்) வேதங்கள்பற்றிய புதிய ஆராய்ச்சி, இந்திய, இந்தோனிஷிய கலை வரலாறு, இந்து பௌதமதப் பழங் கதைகள் முதலிய பல நூல்களை எழுதியவர் அவர்.

இந்திய - அமெரிக்க நல்லுறவுக்கு குமாரசுவாமி அரும் பணி ஆற்றியுள்ளார். 1924ல் நியூயார்க் நகரில் நல்லுறவுகளை வளர்க்க இந்திய பண்பாட்டு நிலையமொன்றை அவர் நிறுவினர். 1938ல் அவர் இந்திய சுதந்திரக் குழுவின் தலைவரானுர். குழு அமெரிக்கா முழுவதிலும் பணியாற்றியதாகும அதன் தலைமையகம் வாஷிங்டனில் இருந்தது.

அவரது வாழ்க்கை கலை வரலாற்றில் மட்டும் கட்டுப்பட்டிருக்கவில்லை. கலையின் உள்ளொளி கண்டவர் அவர். ''மனிதவர்க்கத்தின் பண்பாடுகள் வெளியில் வேற்றுமைக் காட்சி அமைப்பினும் அவற்றின் உள்ளக்கிடக்கைஒன்றே. பண்பாடு என்பது மொழி வேற்றுமைகளைக் கடந்த பொது உலகமாகும்.

அவர் அமெரிக்காவில்பிறந்தவருமல்ல, இந்தியாவில் பிறந்தவருமல்ல எனினும், இவ்விரண்டு நாடுகளும் அவரைக் குறித்துப் பெருமை கொள்ளலாம். ஏனெனில் இரு நாடுகளும் வெவ்வேறு வகைகளில் அவரது இணையற்ற திறமை வளர்ச்சியடைய துணை செய்தன.

(அ. செ.)

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 209ம் இலக்கத்தில் [illegible] திரு. [illegible]துரை அவர்களால் 2-12 1960 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர், நம. சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org